**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 04 ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.36/2023**

**இ.ம.எண்.04/2025**

1) மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்

2) கோட்டாட்சியர், குளித்தலை

3) வட்டாட்சியர், குளித்தலை

4) தலைமை சர்வேயர், குளித்தலை

5) VAO, கீழவெளியூர் **...மனுதாரர்கள்/வாதிகள்**

**/எதிர்/**

தனலெட்சுமி **..எதிர்மனுதாரர்/வாதி**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 17.02.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.சீனிவாசன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8, விதி 1(A)(3) உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/பிரதிவாதிகளால்,

மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்கள் மனுவின் சுருக்கம்:</u>**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் 5ம் வாதியாவார். மற்ற மனுதாரர்கள் இம்மனுதாரரின் உயர் அதிகாரிகள் ஆவார்கள். அவர்களுக்காகவும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு இன்று பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்களை முன்பே சமர்பிக்க வேண்டிய தவறுதலை மன்னித்து, தற்சமயம் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்படி மனுவை ஏற்பதால், வாதிகளுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படாது. அப்படி இல்லையென்றால், மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே, மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்களை முன்பே சமர்பிக்க வேண்டிய தவறுதலை மன்னித்து தற்சமயம் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனுவானது மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

**3)** மனுதாரரின் மனு சரியல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் பொய்யும், வழக்கிற்கு ஜோடிக்கப்பட்ட கற்பனையும் ஆகும். எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கோரியுள்ள நிவாரணம் பெற அருகதையற்றவர் ஆவார். மனு ஆரம்பத்திலே தள்ளுபடி செய்யக்கூடியதாகும்.

**4)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணம் எண்.1ல் 'அ' பதிவேட்டில் க.ராமாயி என்ற பெயர் மட்டும் உள்ளதாக கூறியுள்ளது தவறாகும். ‘அ' பதிவேட்டில் ராமாயி மற்றும் தனலெட்சுமி என வாதி பெயரும் சேர்ந்து இருப்பதை மனுதாரர் மறைத்து ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். ராமாயி என்பது வாதியின் தாயார் பெயர் ஆகும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள 2 மற்றும் 4 ஆவணங்கள் ஏற்கெனவே வாதி தனது சாட்சியத்தில் 7 மற்றும் 12வது ஆவணங்களாக இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்துள்ளார். மனுதாரர் நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு பின்பு உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளாரே தவிர, நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு உள்ள ஆவணங்கள் புல எண்.1541/15ற்கு ஏன் தாக்கல் செய்யவில்லை என்று தெரியவில்லை.

**5)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள 3வது ஆவணம் கிராம நிர்வாக அலுவலரால் வருவாய் துறை ஆவணங்களை வைத்து எழுதியது ஆகும். மனுதாரர் தாவா சொத்து சம்பந்தப்பட் சர்வே எண்.154/15ன் வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளாரே தவிர, புல எண்.154/20ற்கான ஆவணங்களை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று தெரியவில்லை. வருவாய் துறையின் தரப்பில் செய்த மோசடிகளை மறைக்க அரசு தரப்பில் சாட்சியம் அளிப்பதாக தெரிகிறது. எனவே, இம்மனுவானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**6)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**7)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**8)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கானது, எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காகவும், அதன் தொடர்ச்சியாக செயலுறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. மேலும், மேற்படி அசல் வழக்கில் தாவா சொத்தில் உள்ள ஏக்.0.36 சென்ட் நிலமானது வாதிக்கு பாத்தியப்பட்டதாக கூறியும், மேற்படி 36 சென்ட்டில் வருவாய் துறையினர் தன்னிச்சையாக 6 சென்ட் நிலத்தினை உட்பிரிவு செய்து புல எண்.154/20 என்ற புல எண்ணாக உட்பிரிவு செய்தது செல்லத்தக்கதல்ல என்றும், மேற்படி 6 சென்ட் நிலமானது வாதி வகையறாவுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்திட விளம்புகை பரிகாரம் வேண்டியும், அதனைத் தொடர்ந்து பட்டா எண்.1049ல் உள்ள புல எண்.154/15ல் விஸ்தீரணத்தில் 30 சென்ட் நிலம் என்பதற்கு பதிலாக 36 சென்ட் நிலம் என்று சேர்த்து திருத்தம் செய்து தருமாறு 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியும், வாதியால் மேற்படி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9)** மேற்படி சங்கதிகள் அனைத்தையும் மறுத்து இம்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்ததில், மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படாமல் நிலுவையில் இருந்த சமயத்தில், இம்மனுவானது மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் மனுவில் கண்ட

ஆவணங்களைப் பிரதிவாதி தரப்பில் மேற்படி அசல் வழக்கில் கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10)** மனுதாரரின் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதிகள் தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்களை முன்பே சமர்பிக்க வேண்டிய தவறுதலை மன்னித்து தற்சமயம் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி இம்மனுவை ஏற்பதால் வாதிகளுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படாது என்றும், இல்லையென்றால் மனுதாரர்களுக்கே அதிகப்படியான கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்று கூறப்பட்டுள்ளது.

**11)** மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்தைப் பொறுத்த 'அ' பதிவேட்டில் ராமாயி என்ற பெயர் மட்டும் உள்ளது என்றும், அது தவறு என்றம், ‘அ' பதிவேட்டில் ராமாயி மற்றும் வாதியாகிய தனலெட்சுமி ஆகிய இருவர் பெயரும் சேர்ந்து இருப்பதை இம்மனுதாரர் மறைத்து ஆவணமாக தாக்கல் செய்துள்ளதாகவும், மனுவில் கண்ட 2 மற்றும் 4 ஆவணங்கள் ஏற்கெனவே வாதி தரப்பில் 7 மற்றும் 12வது ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் மனுதாரர் நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு பின்பு உள்ள ஆவணங்களை மட்டுமே தாக்கல் செய்துள்ளாரே தவிர, நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு உள்ள தாவா சொத்தான புல எண்.154/15ற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், மேலும் மனுவில் கண்ட 3வது ஆவணமானது கிராம நிர்வாக அலுவலரால் வருவாய் துறை ஆவணங்களை வைத்து எழுதப்பட்டது என்றும், தாவா சொத்து சம்மந்தப்பட்ட புல எண்.154/15ன் வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளாரே தவிர மனுதாரர் புல எண்.154/20ற்கான ஆவணங்களை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று

தெரியவில்லை என்றும், வருவாய் துறையினரால் செய்த மோசடிகளை மறைக்க அரசு தரப்பில் சாட்சியம் அளிப்பதாக தெரிகிறதாகவும் கூறி இம்மனுவை தள்ளுபடி செய்ய எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

**12)** இரு தரப்பில் எடுத்துரைத்த வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 முதல் விசாரணை தொடங்கப்பட்டு நிலுவையில் உள்ள சமயத்தில், பிரதிவாதிகள் தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. மேலும், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் இடையே எழுந்துள்ள எழுவினாக்களைப் பொறுத்து தீர்மானம் செய்யும் பொருட்டு மனுவில் கண்ட ஆவணங்களான தாவா சொத்தைப் பொறுத்த 'அ' பதிவேட்டின் சான்றிட்ட நகல், தாவா சொத்தைப் பொறுத்த நில புல வரைபடத்தின் நகல், தாவா சொத்தைப் பொறுத்த சிட்டா மற்றும் பட்டா ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் ஆகியவற்றை மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டி கோரப்பட்டுள்ள காரணமானது ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**13)** மேலும், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் எழுந்துள்ள எழுவினாக்களை தீர்மானம் செய்யும் பொருட்டு மனுவில் கண்ட ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்ய அனுமதிப்பதன் பேரில், இந்நீதிமன்றத்தால் இரு தரப்பினர்களுக்கும் வாய்ப்புகள் அளித்து முழுமையாக நீதிபரிபாலனமானது வழங்கமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இந்நிலையில், மனுதாரர்கள் தரப்பில் இம்மனு நிலுவையில் இருந்த சமயத்தில் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, குறிப்பாணையை பரிசீலனை செய்ததில், மனுவில் கண்ட ஆவணங்களின் சான்றிட்ட

நகல்களானது, மேற்படி குறிப்பாணையுடன் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**14)** எனவே, மேற்படி குறிப்பாணையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேற்படி ஆவணங்கள் அனைத்தும் முறையாக குளித்தலை வட்டாட்சியரிடம் சான்று பெறப்பட்ட ஆவணங்கள் என்பது தெரிகிறது. மேற்படி ஆவணங்களைப் பொறுத்த உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை ஆகியவற்றை இம்மனுவில் எதுவும் தீர்மானம் செய்யமுடியாது என்றும், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் வாய்ப்புகள் அளித்த பின்பு தீர்ப்பு வழங்கும் சமயத்தில் மட்டுமே இந்நீதிமன்றத்தால் தீர்மானம் செய்யமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**15)** மேலும், இரு தரப்பினர்களுக்கும் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் அவர்களது கட்சியை நிரூபணம் செய்ய வாய்ப்பு அளிக்காமல் இந்நீதிமன்றத்தால் மேற்படி அசல் வழக்கில் எழுந்துள்ள எழுவினாக்களுக்கு தீர்வு காண முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு மேற்படி அசல் வழக்கில் மனுவில் கண்ட ஆவணங்களைப் பொறுத்து ஆட்சேபனைகள் எழுப்பவும், மேலும் பிரதிவாதி தரப்பு சாட்சியை மனுவில் கண்ட ஆவணங்களைப் பொறுத்து குறுக்கு விசாரணை செய்யவும் அனைத்து வகையிலும் வாய்ப்பு உள்ளதாகவும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுவுரையில் எழுப்பப்பட்டுள்ள கேள்விகளைப் பொறுத்து இம்மனுவில் எதுவும் தீர்மானம் செய்ய முடியாது என்றும், மேற்படி அசல் வழக்கின் வழக்கு விசாரணைக்கு பின்பு மட்டுமே தீர்மானிக்கமுடியும் என்று இந்நீதிமன்றம்

கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.04 15:18:17 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.04 15:18:22 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**